**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C - 66/2019**

**Deposition of Witness for Prosecution : P.W.3**

| | | | |
|---|---|---|---|
| Name | : **தமிழ்செல்வன்** | Caste | : |
| Father/Husband Name | : **பெருமாள்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(Accused Present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 29.05.2025**

**முதல் விசாரணை**

நான் கொடிகுளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோனவர் எனது தூரத்து உறவினர் ஐந்துமலை ஆவார். கடந்த 19.03.2017 ஆம் தேதியில் மாலை 05.00 மணியளவில் நானும் எனது நண்பர் சிவாவும் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது எங்களை தாண்டி 6363 எண் கொண்ட இனோவா கார் சென்றது. ஆஜர் எதிரிதான் மேற்படி இனோவா காரை ஓட்டி வந்தார். அப்போது மேற்படி வாகனம் மேற்படி ஐந்துமலை ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தில் மோதியது. பின்னர் ஆம்புலன்சிற்கு தகவல் கொடுத்துவிட்டு, உறவினர்களுக்கு சொன்னோம். ஆம்புலன்சில் மேற்படி காயம்பட்டவரை ஏற்றி அனுப்பினோம். பின்னர் ஒரு வாரம் கழித்து அவர்

இறந்துவிட்டதாக தகவல் தெரிந்துகொண்டேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்தபோது கண்ணனூர் பிரிவிக்கு மேற்கு பக்கம் இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தேன். சம்பவம் நடந்தபோது மேற்படி வேகத்தடை இருந்தது என்றால் சரிதான். சுமார் 10 அடிக்குமேல் கிழக்கு பக்கம் வேகத்தடை இருந்தது. விபத்தில இருந்துபோனவர எப்படி வண்டி ஓட்டிவந்தார், எந்த வேகத்தில் வந்தார் என்று எனக்கு தெரியாது. இறந்துபோனவர் ஓட்டி வந்த வாகனத்திற்கு என்ன சேதம் அடைந்தது என்று எனக்கு தெரியாது. எதிரி இனோவா கார் ஓட்டி வந்தார் என்ற விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். விபத்தில் இறந்துபோனவர் எனது தூரத்து உறவினர். நான் சொன்னதுபோல் சம்பவ இடத்தில் நான் செல்லவில்லை என்றாலும், ஆம்புலன்சில் இறந்துபோன நபரை ஏற்றவில்லை என்றாலும், இறந்துபோன நபர் எனது உறவினர் என்பதால் இழப்பீடு பெறுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

G SATHIA NARAYANAN

Digitally signed by G SATHIA NARAYANAN
Date: 2025.05.29 14:46:34 +0530

**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C - 66/2019**

**Deposition of Witness for Prosecution : P.W.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **சிவா** | Caste | : | |
| Father/Husband Name | : | **ராமர்** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**(Accused Present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 29.05.2025**

**முதல் விசாரணை**

நான் பூதிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வியாபாரம் செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோனவர் எனது உறவினர் ஐந்துமலை ஆவார். கடந்த 8 வருடங்களுக்கு முன்பு தற்போதைய செக்கானூரணி டோல்கேட் அருகே மாலை 05.00 மணியளவில் நானும் எனது நண்பர் தமிழ்செல்வனும் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது எங்களை தாண்டி 6363 எண் கொண்ட இனோவா கார் சென்றது. ஆஜர் எதிரிதான் மேற்படி இனோவா காரை ஓட்டி வந்தார். அப்போது வாகனம் இடித்த சத்தம் கேட்டது. நாங்கள் சென்று பார்த்தபோது, மேற்படி எனது மாமா ஐந்துமலை மேற்படி வாகனத்தில் அடிபட்டு கிடந்தார். பின்னர் ஆம்புலன்சிற்கு தகவல் கொடுத்துவிட்டு உறவினர்களுக்கு சொன்னோம். ஆம்புலன்சில் மேற்படி காயம்பட்டவரை ஏற்றி அனுப்பினோம். பின்னர் ஒரு வாரம் கழித்து அவர்

இறந்துவிட்டதாக தகவல் தெரிந்துகொண்டேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

டோல்கேட் அருகே இருபுறமும் வேகத்தடை உள்ளது. சம்பவம் நடந்தபோது மேற்படி வேகத்தடை இருந்ததா என்றால் ஞாபகம் இல்லை. நானும் எனது நண்பரும் கண்ணனூர் விளக்கிற்கு மேற்கு பக்கம் வந்துகொண்டிருந்தபோது, எதிரி ஓட்டி வந்த வாகனம் எங்களை கடந்து வந்தது. இந்த விபத்தில் இறந்துபோன நபர் எந்த திசையிலிருந்து எந்த திசைநோக்கி வந்தார் என்று நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். இறந்துபோன நபர் நடந்து சென்றாரா இல்லை, இருசக்கர வாகனத்தில் சென்றாரா என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை அன்றைய தினமே விாசரணை செய்தார்கள். பின்னர் விசாரணை செய்யவில்லை. நான் சொன்னதுபோல் சம்பவ இடத்தில் நான் செல்லவில்லை என்றாலும், ஆம்புலன்சில் இறந்துபோன நபரை ஏற்றவில்லை என்றாலும், இறந்துபோன நபர் எனது உறவினர் என்பதால் இழப்பீடு பெறுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

G SATHIA NARAYANAN

Digitally signed by G SATHIA NARAYANAN
Date: 2025.05.29 14:46:41 +0530

**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C - 66/2019**

**Deposition of Witness for Prosecution : P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : **ஜெயமணி** | | Caste | : |
| Father/Husband Name | : **ஐந்துமலை** | | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

**(Accused Present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 29.05.2025**

**முதல் விசாரணை**

நான் எழுவம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோனவர் எனது கணவர் ஐந்துமலை ஆவார். கடந்த 8 வருடங்களுக்கு முன்பு செக்கானூரணி டோல்கேட் அருகே ஹோட்டல் அருகே மாலை 05.00 மணியளவில் எனது கணவர் இருசக்கர வாகனத்தில் எங்கள் வீட்டிலிருந்து செக்கானூரணிக்கு சென்றுகொண்டிருந்தபோது, அவருக்கு பின்னால் வந்த லாரி அவர் மீது மோதி அவருக்கு பலத்த இரத்தக்காயம் ஏற்பட்டது. நான் தகவல் கேள்விபட்டு மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அங்கு தீவிர சிகிச்சையில் பிரிவில் ஒரு வாரம் எனது கணவர் சிகிச்சையில் இருந்தார். எனது கணவருக்கு தலை மற்றும் தோள்பட்டையில் பலத்த காயம் ஏற்பட்டு சுயநினைவு இல்லாமல் இருந்தார். பின்னர் சிகிச்சை பலனின்றி

இறந்துவிட்டார். பின்னர் செக்கானூரணி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் மனு **(அ.சா.ஆ.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்து 3 நாட்கள் கழித்து போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். என்னை விசாரித்த தினம்தான் நான் புகார் கொடுத்தேன். புகாரில் என்ன விபரம் எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. இழப்பீடு கேட்டு வழக்கு நிலுவையில் உள்ளது. எனது கணவர் தீடீரென்று சாலையை தெற்கிலிருந்து வடக்காக குறுக்கே கடந்ததால் இந்த விபத்து நடந்தது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த இடத்தின் அருகே டோல்கேட் அருகே வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் இழப்பீடு பெறுவதற்காக பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

G SATHIA NARAYANAN

Digitally signed by G SATHIA NARAYANAN
Date: 2025.05.29 14:46:47 +0530